பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 14 ஞாயிற்றுக்கிழமை 28.01.2024 கதிர் 82

திருகோணமலையில் இன்று நடக்கவிருந்த

# தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு நிறுத்தம்

நிர்வாகத் தெரிவுகளில் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து திடீர் முடிவு

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்17ஆவதுதேசியமாநாடு, இன்று திருகோணமலையில் கூடி புதிய தலைவர் சிறீதரனின் பதவியேற்ப நிகழ்வு இடம் பெறவிருந்தநிலையில்.திடீரென காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது.**

**கட்சியின்பதவிவிலகிச்செல்லும் தலைவர் மாவை. சோ.சேனாதிராஜா நேற்று மாலை திடீரென இந்த அறிவிப்பை விடுத்தார். கட்சியின் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்தே** ☞ 2

## இனிது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியில் புதிய தலைவர் சிறீதரனது பயணம் அவ்வளவு சுலபமானதல்ல என்பது நேற்றுஅப்பட்டமாகத்தெரிந்துவிட்டது. கட்சிக்குள் சுமந்திரனை எதிர்த்து அவரைத் தலைவராக்கியவர்கள் அவர் தமக்கான நன்றிக்கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும் என்று தீவிரமாக எதிர்பார்த்ததன் விளைவாக தொடக்கமே சறுக்கலாக அமைந்துவிட்டது.

கட்சியின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் கூட்டம் நேற்று திருகோணமலையில் நடந்தது, அந்தக் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மாவை சேனாதிராக இன்றைய தேசிய மாநாட்டை ஒத்திவைத்தது என்றெல்லாவற்றையும் நேற்றே ☞ 2

## டெங்கு நோய்க்கு தடுப்பூசி மருந்து

டெங்கு நோயிலிருந்து பாதுகாப்பதற்காக உலகிலேயே முதன்முறையாக பிரேசிலில் நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏ.டி.எஸ். நுளம்புகளால் பரவும் டெங்கு வைரஸ் காய்ச்சல் உலகின் பல நாடுகளிலும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்தநோயால் ☞ 11

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படதா என்பதை ஆராய அரசு முடிவு

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள் உரிய வகையில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக ஆராயவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அனைத்துசட்டமூலங்களிலும் திருத்தங்களை உள்ளடக்கிய பின்னர் அவை உரிய வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து ஏதேனும் குறைபாடுகள் காணப்படின், அவற்றை நிவர்த்தி செய்ய சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கைஎடுப்பார்கள்.

சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்திய பின்னர் நாடாளுமன்ற அதிகாரிகள் குழுவினால் அது மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். இந்த நடைமுறைகளின் பின்னர் என்னிடம் சமர்பிக்கப்படும் சட்டமூலத்திலேயே கையொப்பமிட்டு சான்றுப்படுத்துவேன் என்றார்.

முன்னதாக, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலத்தில் உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட 13 திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேயில்லை என்பதைத்தான் உறுதிப்படுத்தியிருக்கிறார் என்றும் எனவே சபாநாயகர் அதில் கையெழுத்திடக்கூடாது என்று வலியுறுத்துகின்றார் என்றும் ☞ 11

## ரணிலை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்து புதிய கூட்டணி உதயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தெரிவிக்கும் நோக்கத்துடன் புதிய கூட்டணி ஜாஎலவில் நேற்றுத் தொடங்கப்பட்டது. பொது ஜன பெரமுன தரப்பிலிருந்து ரணில் பக்கம் சார்ந்து நிற்கக்கூடிய அமைச்சர் நளின் பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிமல் லன்ஸா மற்றும் அனுர பிரிய தர்சன யாப்பா ஆகியோரால் தொடங்கப்பட்டுள்ள இந்தக் கூட்டணியில் மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

''ஜனாதிபதியின் வேட்புமனுவெற்றிக்காக புதிய கூட்டணி'' என்ற அறிவிப்புடன் தொடங்கப்பட்டுள்ள புதிய கூட்டணியில் அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்ததாவது:

எம்மால் செய்ய முடியாத விடயங்களை நாம் சொல்வதில்லை. அவற்றைக் கூறுவதும் இல்லை. அதன் காரணமாகவே ☞ 9

## போதைப் பொருள் வர்த்தகம் ஜூன் மாதமளவில் கட்டுக்குள்

பாதாள உலகக் குழுவினரும் கட்டுப்படுவர் என்கிறார் அமைச்சர்

'யுக்திய' நடவடிக்கை மூலம்ஜூன்மாதமளவில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுவினரை கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்

களனிப் பகுதியில் நேற்றையதினம் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பிலும், யுக்திய செயற்றிட்டம் சம்பந்தமாகவும் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடையவர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ☞ 11

## ஜனாதிபதி விடுத்த அழைப்பு தேசிய அரசுக்கானது அல்ல

அமைச்சர் பந்துல விளக்கம்

நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் இணைந்து செயற்பட வருமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பு தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான அழைப்பல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார் ஆளும் கட்சியின் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துலகுணவர்த்தன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களால், ஜனாதிபதியின் அனைத்துக் கட்சிக்கான அழைப்பிற்குக் காரணம் தேசிய அரசை அமைப்பதற்காகவா என்று கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் ☞ 11

## ரணில் ஆதரவு கூட்டணி பழைய கொரக்காய்

மேர்வின் சில்வா எகத்தாளம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக உருவாகியுள்ள புதிய கூட்டணி பழைய கொரக்காய் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

புதிய கூட்டணி உதயமாகியுள்ளமை தொடர்பில் நேற்றையதினம் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கறியைத் தயாரிக்கின்றபோது பழைய கொரக்காவையே பயன்படுத்துவார்கள். புதிய கொரக்காவைப் பயன்படுத்தினால் அது ருசியாக அமையாது. அந்த வகையில் தான் புதிய கூட்டணி புதிய கொரக்கா போடப்பட்ட கறிபோன்றுள்ளது.

குறித்த கூட்டணியில் உள்ள ஒருவர் மீது எனக்கு மிகுந்த கவலையாக உள்ளது. அநுரபிரியதர்சனயாப்பா. அவர் மிகவும் முக்கியமான நபராவார். ஆனால் அவர் பிழையான பக்கத்துக்குச் சென்றுள்ளார். அதே போன்றுநிமல்லன்சாவும் என்னுடைய நெருங்கிய நண்பராவார்.

ஜா எலவில் ☞ 11

## இலங்கையின் சுதந்திர தினத்தில் பிரிட்டனில் தமிழர் போராட்டம்

அனைவரையும் அணி திரள அழைப்பு

இலங்கையின் சுதந்திர நாளான பெப்ரவரி 4 தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மீட்டுத்தர பிரிட்டனிடம் வலியுறுத்தி புலம்பெயர் தமிழர் அமைப்புக்களால் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள் ளது. இதற்காக ''பிரித்தானியாவின் அரண்மனையை நோக்கி பேரணியாக அனைவரும் அணிதிரள்வோம்'' என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியை பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை, அனைத்துலக தமிழ் இளையோர் அமைப்பு, அனைத்துலக இராசதந்திரக்கட்டமைப்பு ஆகிய தமிழ் தேசிய அமைப்புக்கள் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

இரு தேசங்களாக வாழ்ந்த மக்களை,1948 இல்பிரித்தானியமுடியரசு ஆட்சி அதிகாரத்தை சிங்களவர்களின் கொடுத்த நிலையில் தமிழினம்நிர்க்கதியாகியுள்ளதை தெளிவுபடுத்தி, தமிழர்களின் சுயநிர்ணய ☞ 11

## மட்டக்களப்பிலும் நேற்று 'கறுப்பு ஜனவரி' போராட்டம்



கறுப்பு ஜனவரியை முன்னிட்டு ஊடக அடக்குமுறைக்கு எதிராக நேற்றுமட்டக்களப்புகாந்தி பூங்காவின் முன்னால் ஊடகவியலாளர்கள் கறுப்புப்பட்டி அணிந்து போரட்டத்தில் ஈடுபட்டனர். கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியை வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம்,கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின்ஏற்பாட்டில் இந்தப்போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

நாடாளுமன்ற ☞ 11

## இனி இது .....

வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். எனவே அவற்றைப் பற்றி திருகோணமலையில் நேற்றைய கூட்டத்தின் சில உள்வீட்டுத் தகவல்களைத்தான் இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

கட்சியின் யாப்புப்படி தலைவர் பதவிக்குத்தான் வேட்புமனுக் கோரி முறையாகத் தேர்தல் நடத்தவேண்டும் என்றுள்ளது. ஏனைய பதவிகளுக்கு அப்படித் தேர்தல் நடத்தப்படுவது பற்றி யாப்பில் எதுவும் இல்லை. கட்சியின் செயலாளர் உட்பட ஏனைய பதவிகள் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதே இதுவரை கால நடைமுறையாக இருந்து வந்தது. தலைவர் தெரிவும் இதுவரை அப்படித்தான் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேர்தல் இன்றி நடந்துவந்தது. ஆனால், இம்முறை அது தேர்தல் மூலம் முறையாக முடிவு செய்யப்பட்டது. அதனாலோ என்னவோ ஏனைய பதவிகளுக்கும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்கிற மனநிலையில் பொதுக் குழு உறுப்பினர்கள் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

பொதுக் குழுக் கூட்டத்திற்கு முன்னதாக, கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கூடியது. அங்கு உரையாற்றிய சுமந்திரன், கட்சியில் தனக்கு சிரேஷ்ட உப தலைவர் பதவியை வழங்குவதற்கு தலைவர் சிறீதரன் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார் என்றும் எனினும் முடிந்தால், தலைவரின் ஆதரவுடன் தான் செயலாளர் பதவியை ஏற்பதற்கும் தயாராக இருக்கின்றார் என்றும் அறிவித்தார். அதனைச் சிறீதரனும் ஏற்றுக்கொண்டார். ஆனால், கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகள் வடக்கு கிழக்கு இடையே மாறி மாறி பகிரப்பட்டுவந்த கட்சிப் பாரம்பரியப்படியே தொடரவேண்டும் என்று மத்திய செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர், யாப்பில் அப்படிக் கூறப்பட்டிருக்காவிட்டாலும் தனக்கான செயலாளர் பதவியை கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு விட்டுக்கொடுக்க சுமந்திரன் சம்மதித்தார். அதனடப்படையில் அவர் கிழக்கைச் சேர்ந்த மூவரின் பெயர்களை முன்மொழிந்தார். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் கட்சித் தலைவர்களில் ஒருவரைச் செயலாளர் பதவிக்குத் தலைவர் தெரிவு செய்யலாம் என்று அவர் முன்மொழிந்தார். அதாவது சாணக்கியன், குகதாசன், கலையரசன் ஆகியோரது பெயர்கள் தலைவரது தெரிவுக்காக முன்மொழியப்பட்டன.

கட்சித் தலைவராக சிறீதரன் வரவேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டி வந்த மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் திருகோணமலையைச் சேர்ந்த குகதாஸனை கட்சியின் செயலாளராக முன்மொழிவது என்று தலைவர் தீர்மானித்தார். அதேபோன்று கட்சியின் ஏனைய பதவிகளுக்கும் ஆட்கள் முன்மொழியப்பட்டனர். சிரேஷ்ட உபதலைவராக சி.வி.கே. சிவஞானமும் இணைப் பொருளாளர்களாக ஞா.சிறிநேசன், கனகசபாபதி ஆகியோரும் துணைத் தலைவர்களாக கே.வி.தவராசா, சாள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன், பாக்கியசெல்வம் அரியநேந்திரன், வைத்தியர் சத்தியலிங்கம் ஆகியோரும் இணைச் செயலாளர்களாக சாந்தி சிறீஸ்கந்தராஜா, ரஞ்சனி கனகராஜா, சரவணபவன், சாணக்கியன், சிவமோகன் ஆகியோரும் சுமந்திரன் உட்பட 13 பேர் மத்திய செயற்குழு உறுப்பினர்களாகவும் முன்மொழியப்பட்டனர்.

கட்சி யாப்பின்படி நிர்வாக உறுப்பினர்களை மத்திய செயற்குழு தெரிவு செய்யமுடியாது. அதனை பொதுக் குழுவே தெரிவு செய்யமுடியும். எனவேதான் மத்திய செயற்குழுவின் முன்மொழிவுகளாக இவர்களின் பெயர்களைப் பொதுக் குழுவிற்கு முன்மொழிவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஒருவேளை பொதுக் குழுவில் இந்த முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளாமல் இந்தப் பதவிகளுக்கு செயற்குழுவைச் சேர்ந்த யாருடைய பெயர்களையாவது பொதுச் சபையினர் முன்மொழிந்தால் அவர்கள் போட்டியிலிருந்து தாமாகவே விலகிக்கொள்வது என்ற இணக்கமும் செயற்குழுவில் எட்டப்பட்டது.

அதனடிப்படையில், பொதுக் குழு கூட்டப்பட்டு செயற்குழுவின் முன்மொழிவு அறிவிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திற்கு மாவையர் தலைமை தாங்கினார். பொதுக் குழுவில் இருந்த பலரும் அந்த முன்மொழிவுகளை ஏற்க முடியாது என்று குழப்பம் விளைவித்தனர். குறிப்பாக செயலாளர் பதவியை குகதாசனுக்கு வழங்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால் பொதுக் குழுவினர் விரும்பியபடி வாக்கெடுப்பு நடத்துவதற்கு மாவையர் முயன்றார். ஆனால், அதனை அவரால் திறம்படச் செய்ய முடியவில்லை. அதையடுத்து பழைய நிர்வாகத்தில் பதில் செயலாளர்களில் ஒருவர் சுமந்திரன் என்பதால் அந்த வாக்கெடுப்பை நடத்தும்படி சுமந்திரனின் கைகளில் பொறுப்பை ஒப்படைத்தார் மாவையர்.

பொறுப்பை ஏற்றுக்கொண்ட சுமந்திரன், மத்திய செயற்குழுவின் முன்மொழிவுகளை பொதுச் சபை ஏற்கின்றதா இல்லையா என்பதை பொதுச் சபையின் வாக்கெடுப்புக்கு விட்டார். ஆதரிப்பவர்கள் கைகளை உயர்த்துமாறு கேட்டு அவர்களின் எண்ணிக்கை சுமந்திரனால் எண்ணப்பட்ட அதேநேரம் சுமந்திரன் எதிர்ப்புத் தரப்பினரில் ஒருவராலும் எண்ணப்பட்டது. அதில் மாறுபாடேதும் இல்லாது 112 பேர் ஆதரிக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டது. எதிர்ப்பவர்களின் எண்ணிக்கையும் அப்படியே கைகள் தூக்கப்பட்டு எண்ணப்பட்டதில் இருவராலும் மாற்றம் ஏதுமின்றி 104 பேர் எதிர்க்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டது. அதனடிப்படையில் நிர்வாகிகளுக்கான மத்திய செயற்குழுவின் முன்மொழிவினை பொதுச் சபை ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்டது. எல்லாப் பிரச்சினைகளும் சுமுகமாக முடிக்கப்பட்டதாகக் கருதி கூட்டமும் முடித்து வைக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவுகள் குறித்து தலைவர் உட்பட மற்றவர்கள் ஒருபுறத்தில் செய்தியாளர்களுக்கு அறிவிப்புக்களைச் செய்து கொண்டிருந்த சமயத்தில், பொதுச் சபையின் முடிவுகளை ஏற்க முடியாது என்று மட்டக்களப்பைச் சேர்ந்த சிறீநேசன், அரியநேன்திரன், கொழும்பைச் சேர்ந்த சட்டத்தரணி தவராசா, சாவகச்சேரியைச் சேர்ந்த அகிலன் உட்படப் பலர் மீண்டும் குழப்பங்களை விளைவித்தனர். நிர்வாகிகளைப் பொதுச் சபைதான் தெரிவு செய்யவேண்டும் என்பதும் மீண்டும் பொதுச் சபை கூட்டப்பட்டு தெரிவுகள் நடத்தப்படவேண்டும் என்றும் பொதுச் சபைக் கூட்டத்தில் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்த நிலையில் வாக்கெடுப்பில் 216 பேர் மட்டுமே கலந்துகொண்டிருந்ததால், 100க்கும் மேற்பட்டவர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறிய நிலையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டமை பிழையானது என்றும் அவர்கள் காரணங்களைக் கற்பித்தார்கள்.

அவர்கள் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தியதை அடுத்து இன்று நடக்கவிருந்த தேசிய மாநாட்டை ஒத்தி வைப்பதாக மாவை சேனாதிராசா திடீர் அறிவிப்பு ஒன்றை விடுத்தார். புதிய தலைவரும் இன்று பதவியேற்க இருந்தவருமான சிறீதரனுடனோ மத்திய செயற்குழுவுடனோ கலந்தாலோசிக்காமல் தேசிய மாநாட்டை ஒத்திவைப்பதாக அவர் திடீரென அறிவித்துவிட்டார். இது மற்றையவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தாலும், கட்சியின் தலைமைப் பொறுப்பை அவர் இன்னமும் சிறீதரனிடம் ஒப்படைக்காத நிலையில் அவரால் செய்யப்பட்ட அறிவிப்புக்கு மதிப்பளித்து இன்றைய கூட்டத்திற்குச் செல்வதில்லை என்று ஏனையவர்கள் -முடிவெடுத்துள்ளனர். எனினும் விரைவிலேயே தேசிய மாநாடு கூடப்படும் என்று தெரிகின்றது. அது காலவரையறை இன்றித் தள்ளிப்போகாது என்றும் தெரிகின்றது.

சிறீதரனைத் தலைவராக்கிய கிழக்கைச்சேர்ந்த அணியினருக்குச் செயலாளர் பதவி வழங்கப்படவில்லை என்பதும் அந்த அணியைச் சேர்ந்தவர்களுக்கு கட்சியில் முக்கிய பதவிகள் வழங்கப்படவில்லை என்பதும்தான் இப்போதுள்ள பிரச்சினைக்குக் காரணம். இப்போது செயலாளராக இருப்பவர் தலைவர் தேர்தலில் சுமந்திரனை வெளிப்படையாக ஆதரித்தவர். சிரேஷ்ட உபதலைவராக இருப்பவர் சுமந்திரனை தலைமைப் பதவிக்கு முன்மொழிந்தவர் (சிவஞானம்) ஏனைய பதவிகளில் உள்ள சாணக்கியன் உட்படப் பலரும் சுமந்திரனின் விசுவாசிகள் என்று கருதப்படுபவர்கள். கட்சியைப் பிளவுபடுத்தாமல், ஒற்றுமையாகக் கொண்டு நடத்தும் நோக்கத்தோடு சிறீதரன் இந்தத் தெரிவுகளுக்கு இணங்கிச் சென்றிருந்தார் என்றே அறியமுடிகின்றது. கட்சிப் பதவிகளில் தனது ஆதரவாளர்கள் மட்டுமே இருக்கவேண்டும் என்று அவர் பிடிவாதம் காட்டவில்லை. கட்சிக்குள்ளும் வெளியிலும் ஒற்றுமை குறித்து அதிகம் பேசிவிட்டு எப்படி தனக்கு ஆதரவானவர்களை மட்டும் கட்சிப் பதவிகளில் அமர்த்த முடியும் என்ற சங்கடம் அவருக்கு இருந்திருக்கக்கூடும்.

அவரது இந்த நிலைப்பாடே இப்போது அவரது ஆதரவாளர்களுக்குப் பிரச்சினையாகி இருக்கின்றது. "நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள்" என்று அவர்கள் சிறீதரனிடம் முகத்துக்கு நேரே கூறிவிட்டார்கள் என்று அறியமுடிந்தது. ஒரு கட்சித் தலைவராக எல்லோரையும் அரவணைத்துச் செல்வது என்கிற சிறீதரனின் நிலைப்பாடே சரியானது; தேவையானது. கட்சியைப் பாதுகாக்கக்கூடியதும் ஆனால், அதனைப் புரிந்துகொள்ளாத அவரது ஆதரவாளர்கள் அவரிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கும் நிலையில் நிலமையை எப்படிச் சமாளிப்பது என்பதே அவர் முன் இருக்கும் பெரும் சவால். பொதுச் சபையைக் கூட்டி மீண்டும் பதவிகளுக்குத் தெரிவு நடத்தவில்லை என்றால் தேசிய மாநாட்டைப் புறக்கணித்துக் கட்சியிலிருந்து ஒதுங்குவோம் என்று அரிய நேந்திரன் நேற்று அறிவித்திருக்கிறார். எனவே பாம்பென்று அடிக்கவும் முடியாது, பழுதென்று கடக்கவும் முடியாத நிலைக்குள் சிக்கிக்கொண்டுள்ளார் புதிய தலைவர். இதிலிருந்து அவர் செய்கூலி, சேதாரம் இன்றி மீண்டு வருவ-துதான் அவர் கட்சியையும் தமிழர்களையும் எப்படி வழிநடத்தப் போகின்றார் என்பதை எதிர்வுகூறப்போகின்றது. முதற் கோணல் முற்றும் கோணல் என்றாகிவிடாத அளவிக்கு இந்த விடயத்தை அவர் கையாள வேண்டியிருக்கின்றது. விரைவில் அனைத்தும் சுமுகமாகி கட்சியின் தேசிய மாநாடு நடத்தப்படும் என்று எதிர்பார்ப்போம்....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் இன்றைய தேசிய மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

கட்சியின் உறுப்பினர்கள் இடையே இணக்கப்பாட்டுடன் தீர்மானங்களை எட்ட முடியாமையின் காரணமாக தேசிய மாநாடு ஒத்திவைக்கப்படுகின்றது என்று மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

முன்னதாக கட்சியின் புதிய தலைவர் ஜனவரி 21 தெரிவு செய்யப்பட்ட நிலையில் ஏனைய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்காக பொதுக் குழு நேற்று திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் கூடியது. முதலில் தமிழ் அசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூடி ஆராய்தது. நீண்ட நேரக் கலந்துரையாடல்களின் பின்னர் கட்சியின் நிர்வாகிகள் தொடர்பில் ஒரு முன்மொழிவை பொதுச்சபையிடம் முன்வைப்பதற்கு செயற்குழுவினர் இணங்கினர். அதன்படி பொதுச் சபை கூட்டப்பட்டு, கட்சியின் புதிய தலைவர் நிர்வாகிகள் தொடர்பான செயற்குழுவின் முன்மொழிவைச் சமர்ப்பித்தார்.

அதனடிப்படையில் மத்திய செயற்குழு கூட்டத்தில் முடிவெடுத்தபடி பொதுச் செயலாளராக திருகோணமலையைச் சேர்ந்தவரான சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டதோடு, சிரேஷ்ட உபதலைவராக சி.வி.கே. சிவஞானமும் இணை பொருளாளர்களாக ஞா.சிறிநேசன், கனகசபாபதி ஆகியோரும் துணைத்தலைவர்களாக கே.வி.தவராசா, சாள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன், பாக்கியசெல்வம் அரியநேந்திரன், வைத்தியர் சத்தியலிங்கம் ஆகியோரும் இணைச் செயலாளர்களாக சாந்தி சிறீஸ்கந்தராஜா, ரஞ்சனி கனகராஜா, சரவணபவன், சாணக்கியன், சிவமோகன் ஆகியோரும் சுமந்திரன் உட்பட 13 பேர் மத்திய செயற்குழு உறுப்பினர்களாகவும் முன்மொழியப்பட்டனர்.

இதன் பின்னர் மதிய போசனத்துக்கான இடைவேளை விடப்பட்டதோடு தொடர்ந்து பொதுச்சபைக் கூட்டம் தொடர்ந்தது. பொதுச்செயலாளர் நியமனம் சம்பந்தமாக சர்ச்சைகள் ஏற்பட்டன. உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்து கைகலப்பில் ஈடுபடுமளவிற்கு நிலைமைகள் மோசமாகின. இதனையடுத்து பல்வேறு இணக்கப்பாடுகளை எட்டுவதற்கான முன்மொழிகள் செய்யப்பட்டபோதும் உறுப்பினர்களில் சிலர் நிர்வாகத் தெரிவினை ஏற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பு வெளியிட்டார்கள். அது மட்டுமன்றி, பொதுச்செயலாளராக குகதாசனை நியமிப்பதற்கும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததை அடுத்து, பொதுச்செயலாளர் தெரிவிக்கான பகிரங்கமான வாக்கெடுப்பினை நடத்துமாறு கோரினார்கள். எனினும், குறித்த நிர்வாகத் தெரிவுக்கு மத்திய செயற்குழு அங்கீகாரம் அளித்துள்ளதன் அடிப்படையில் மீண்டும் தனியொரு பதவிநிலைக்காக வாக்கெடுப்பு நடத்த முடியாது என்ற விடயத்தினை சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தவிர்ந்த புதிய நிருவகத்தினருக்கான பொதுக் குழுவின் அனுமதியைக் கோரும் பிரேரணையை கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் முன்மொழிந்தார். அதனையடுத்து, பீற்றர் இளஞ்செழியர் அதனை வழிமொழிந்தார்.

தொடர்ந்து, குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உறுப்பினர்கள் தங்களது கைகளை உயர்த்தி ஆதரவினையும் எதிர்ப்பினையும் வெளியிட்டனர். அதனடிப்படையில் எண்ணிக்கை கணிக்கப்பட்டது. அந்த வகையில் பிரேரணைக்கு ஆதரவாக 112 வாக்குகளும் எதிராக 108 வாக்குகளும் கிடைத்தன. எட்டு மேலதிக வாக்குகளால் மத்திய செயற்குழுவின் முடிவு நிறைவேற்றப்பட்டது.

இதனை அடுத்து கூட்டம் முடிவுறுத்தப்பட்டு நிர்வாகத் தெரிவுகள் குறித்து அங்கிருந்த செய்தியாளர்களுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, பொதுச் சபை உறுப்பினர்கள் சிலர் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்தினர். இந்தப் பொதுக் குழுக் கூட்டம் சரியாக நடத்தப்படவில்லை என்றும் தெரிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மாவை சேனாதிராசாவுடன் அவர்கள் தர்க்கப்பட்டனர். இதை அடுத்து இன்று நடக்க இருந்த தேசிய மாநாட்டைப் பிற்போடுவதாக அறிவித்த மாவை சேனாதிராசா, இது குறித்து மத்திய செயற்குழு மீண்டும் கூடி ஆராய்ந்து அறிவிக்கும் என்றும் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# மூன்று பில்லியன் ரூபா இலாபத்தை திறைச்சேரிக்கு செலுத்தியுள்ளோம்

## லிற்றோ நிறுவனம் அறிவிப்பு




மூன்று பில்லியன் ரூபா இலாப வருமானத்தை திறைச்சேரிக்கு செலுத்தியுள்ளோம். பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்த லிற்றோ நிறுவனம் தற்போது இலாபமடைந்துள்ளது என லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள லிற்றோ நிறுவனத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் லிற்றோ நிறுவனம் ஸ்ரீலங்கா காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு 1.5 பில்லியன் ரூபா இலாப வருமானத்தை செலுத்தியுள்ளோம்.

தற்போது 1.5 பில்லியன் ரூபா இலாப வருமானத்தை ஸ்ரீலங்கா காப்புறுதி கூட்டுத்தாபனம் ஊடாக திறைச்சேரிக்கு செலுத்தியுள்ளோம்.

லிற்றோ நிறுவனத்தின் தலைவராக பதவியேற்கும்போது நிறுவனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. முறையான முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றின் ஊடாக நிறுவனம் தற்போது இலாபமடைந்துள்ளது.

லிற்றோ நிறுவனத்தின் எரிவாயு சிலிண்டரின் பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொது காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியை முகாமைத்துவம் செய்து எரிவாயு சிலிண்டரின் விலையை ஸ்திரமான நிலையில் பேணுகிறோம். எரிவாயு விலை அதிகரிப்பால் நிறுவனத்துக்கு சொற்பளவிலான இலாபமே கிடைக்கப் பெறுகிறது. - என்றார். (05)

# சொந்தப் பெயரில் வாகனங்களை பதியாதவர்கள் உடன் பதிவுசெய்க

## போக்குவரத்து திணைக்களம் எச்சரிக்கை

வாகனங்களை வாங்கி சொந்த பெயரில் பதிவு செய்யாமல் பயன்படுத்துபவர்கள் விரைவில் தங்களது பெயரில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தற்போது சிசிடிவி கமரா மூலம் போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து வாகன உரிமையாளர்களுக்கு அபராதம் கடிதம் அனுப்பும் திட்டத்தை பொலிஸார் செயற்படுத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக, வாகனத்தின் தற்போதைய உரிமையாளர் மோட்டார் போக்குவரத்துத் துறையில் பதிவு செய்திருப்பது முக்கியம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்வதன் மூலம் வாகனத்தின் புதிய உரிமையாளர் மற்றும் பழைய உரிமையாளர் இருவரும் சிரமத்தைத் தவிர்க்கலாம் எனவும் அறிவுறுத்தியுள்ளது. (05)

# சனத் நிஷாந்தவின் சாரதிக்கு மறியல்

*இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்தவின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்த மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் பலியான சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார். (05)*

# சிதறிக்கிடக்கும் தலைமைத்துவத்தை சிறீதரனே ஒன்றிணைக்க வேண்டும்

## கோருகிறது நாடு கடந்த தமிழீழ அரசு

சிதறிக்கிடக்கும் தலைமைத்துவத்தை சிறீதரன் ஒன்றிணைக்க வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின்புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நிலத்திலும் புலம்பெயர் தேசத்திலும் கட்சிகள் மற்றும் அமைப்புக்களை ஒன்றிணைக்கும் காலப் பணியை அவர் ஆற்ற வேண்டும் என்றும் செயலூக்கமான நடவடிக்கை வாயிலாவே ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, முதற் தடவையாக கட்சித் தலைவர் தெரிவில் மக்கள் ஆட்சி முறையின் வாயிலாகத் தெரிவு இடம்பெறுவதும் வெற்றி பெறுவதும்தான் கட்சி மற்றும் அமைப்புக்கள் சார்ந்த ஜனநாயகத்தை வலுப்படுத்தி, நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் வழியில் சென்று கட்சியை புத்தெழுச்சி கொள்ளும் வகையில் அவரது பணி அமையுமென்பதில் எனக்கு அசைக்கவியலாத நம்பிக்கை உண்டு என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# அரசுக்கு சொந்தமான இரண்டு கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்றியமைக்க தீர்மானம்!

அரசுக்கு சொந்தமான இரண்டு கட்டடங்களை சிறைச்சாலை கட்டடங்களாக மாற்றியமைக்க நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. சிறைச்சாலைகளில் தற்போது ஏற்பட்டுள்ள அதிக நெருக்கடிகளுக்கு தீர்வாகவே இந்த நடவடிக்கை எடுப்பதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை,நாட்டில்இருக்கும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 32 ஆயிரத்துக்கும் அதிகமாகும். என்றாலும் சிறைச்சாலைகளில் சுமார் 13 ஆயிரம் கைதிகளை தடுத்துவைப்பதற்கான இட வசதியே இருப்பதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் நிலவிவரும் நெருக்கடியை கட்டுப்படுத்தும் நோக்கில் ஹெந்தல பிரதேசத்தில் அமைந்திருக்கும் சிறுவர் வைத்தியசாலையின் சில கட்டடங்கள் மற்றும் மட்டக்களப்பில் அமைந்துள்ள பழைய வைத்தியசாலை ஒன்றின் கட்டடத்தை இதற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலை கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்றி, கைதிகளைத் தங்கவைப்பதற்கு பயன்டுத்துவது தொடர்பில் சுகாதாதர அமைச்சு கலந்துரையாடியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதைப் பொருள் ஒழிப்பு நோக்கிலான 'யுக்திய' வேலைத்திட்டத்தின் மூலம் நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் பலர் நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாகவே சிறைச்சாலைகளில் நெருக்கடி நிலைமை அதிகரித்துள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

# அல்குவைதாவுக்கு உதவிய இலங்கையர் நால்வருக்கு சிவப்பு பிடியாணை பிறப்பிப்பு

அல்குவைதா அமைப்புக்கு உதவியதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசிங்க வெள்ளிக்கிழமை ஆங்கிலத்தில் சிவப்பு பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் கோரிக்கைக்கு அமைவாக இந்த சிவப்புப் பிடியாணையை பிறப்பித்துள்ளார்.

கள்எலிய கலகெடிஹேன பிரதேசங்களைச் சேர்ந்தவர்களான தற்போது ஆஸ்திரேலியா மற்றும் சிரியாவில் வசிக்கும் நால்வருக்கே இந்த சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (05)

# அமைதிப் போராட்டத்தைக் குழப்பிய குண்டர்கள்: மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

*கொள்ளுப்பிட்டியில் சாத்வீக முறையில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்தை குழப்பிய சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் கலாநிதி அஜந்தா பெரேரா உள்ளிட்ட தரப்பினர் முறைப்பாடு செய்துள்ளனர்.*

*கலாநிதி அஜந்தா பெரேரா உள்ளிட்ட சில சிவில் செயற்பாட்டாளர்கள் கொள்ளுப்பிட்டி லிபேர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை சாத்வீக முறையில் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.*

*இதன் போது முகத்தைத் துணியால் மூடிக்கட்டியவாறு வந்த சில குண்டர்கள் சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர்.*

*முகமூடி அணிந்த சில ஆண்கள் போராட்டக்காரர்களைக் குழப்புவதையும், அவர்களின் போராட்டத்தை நிறுத்துமாறு வலியுறுத்துவதையும் வெளிக்காட்டும் காணொளிகள் வெளியாகியுள்ளன.*

*குறித்த குண்டர்களால் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் தாக்கப்படுள்ளார்.*

*போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களிடமும் அவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடு பட்டுள்ளனர்.*

*பின்னர் சம்பவ இடத்துக்கு பிரவேசித்த பொலிஸார் தலையிட்டு, குண்டர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.*

*இந்த சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் கலாநிதி அஜந்தா பெரேரா உள்ளிட்ட தரப்பினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்தனர்.*

*இது குறித்து கலாநிதி அஜந்தா பெரேரா கூறுகையில் -*

*'ஒரு சந்தர்ப்பத்தில் வாகனத்தில் இருந்து ஒரு குழுவினரை இறக்கினர். அந்த சந்தர்ப்பத்தில் பொலிஸார் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்தனர். பொலிஸார் அங்கிருந்து ஏன் தப்பிச் சென்றார்கள் என்று தெரியவில்லை. ஏற்கனவே திட்டமிட்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான விடயங்களை செய்வதற்கா நாடாளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.*

*மக்களின் வாயை மூடுவதா முன்னோக்கிச் செல்லும் செயற்பாடு என்று கேட்கின்றேன். கொள்ளுப்பிட்டி பொலிஸார் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள் என்று அறிந்த பின்னரேயே குறித்த குண்டர்கள் குழுவினர் பெண்களைத் துன்புறுத்த ஆரம்பித்தனர். - 'என்றார். (05)*

# யாழில் புகையிலைக் கொள்வனவில் நம்பிக்கை மோசடி ; 35இற்கு மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிப்பு



யாழ்ப்பாணம், தீவகம், ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிக்குட்பட்ட பகுதியில் வாழும் விவசாயிகளில் சுமார் 30இற்கும் மேற்பட்ட விவசாயிகள் நம்பிக்கை அடிப்படையில் அப்பகுதியை சேர்ந்த வியாபாரியிடம் உலர்த்திய புகையிலையை விற்பனைக்காக கொடுத்துள்ளனர்.

எனினும் குறித்த வியாபாரி நம்பிக்கை மோசடி செய்து தலைமறைவாகியமை தொடர்பில் விவசாயிகள் மத்தியில் தெரிய வந்த நிலையில் யாழ்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காததால் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஊடாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கையொப்பமிட்டு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு -

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் விவசாயிகள் ஆகிய நாங்கள் கடந்த 2023 ஆண்டு புகையிலைகளை பயிர் செய்து அதனை எங்கள் வாழ்வாதாரமாக மேற்கொண்டோம்.

இந்நிலையில் உலர்த்திய புகையிலைகளை நம்பிக்கை அடிப்படையில் எமது பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிப்பவருக்கு விற்பனை செய்தோம்.

அவர் அதற்கான பணத்தைக் கடந்த 2023 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்பு தருவதாகக் கூறி னார்.

ஆனால் அவர் பணத்தை குறித்த தவணையில் கொடுக்காததால் அது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலைய குற்றப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்தோம்.

இதனையடுத்து பொலிஸார் அவரை கைது செய்து பின்னர் சட்டத்தரணி ஊடாக பிணையில் விடுதலை செய்தனர்.

இந்நிலையில் அவர் பணத்தை ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு வழங்குவதாக சட்டத்தரணி ஊடாகவும் பொலிஸ் உத்தியோகத்தர் முன்னிலையிலும் எழுத்து மூலம் உத்தரவாதம் வழங்கினார்.

ஆனால் குறித்த திகதியில் நாங்கள் பொலிஸ் நிலையத்திற்கு சென்றிருந்த போது அவர் சமுகம் தரவில்லை என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. இதனால் 35 பேருக்கு மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு எங்கள் பணத்தைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தனி அக்கறையும் திட்டங்களும் தேவை

இலங்கையில் பாலியல் ஒழுக்கக்கேடுகள் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகரித்து வருகின்றன எனப் புள்ளிவிவரங்கள்கூறுகின்றன. கொவிட்பெருந்தொற்றுக் காரணமாக பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாதிருந்தகாலம்முதல்இந்தவிடயத்தில்கணிசமான அதிகரிப்பு காணப்படுவதாகக் கூறப்பட்டு வருகின்றது. கொவிட்டைத்தொடர்ந்துஏற்பட்டபொருளாதாரநெருக்கடி நிலைமையை இன்னும் மோசமாக்கி இருக்கின்றது. தாய் தந்தையர் இருவரும் வருமானம் தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாவது, சிறுவர்கள் தனித்து விடப்படுவது மற்றும் சிறுவர்களும் வேலை தேடிச் செல்வதுபோன்றநிலமைகள்ஒழுக்கக்கேடுகள்இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 18 வயதுக்கு உட்பட்ட 1,502 பேர் பாலியல் ஒழுக்கக் கேடுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இது பதிவுகளுக்கு வந்து சம்பவங்களின் எண்ணிக்கை மட்டும்தான். கடலில் பனி மலைகள் போன்று, இதுபோன்ற விடயங்களில் எப்போதுமே வெளியே தெரியாமல், மூடி மறைக்கப்படும் சம்பவங்களின்எண்ணிக்கைபலமடங்குஅதிகம்என்பது துறைசார் நிபுணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. எனவே உண்மையான பாலியல் ஒழுக்கக்கேடுகள் தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கையை உத்தியோகபூர்வ எண்ணிக்கையிலிருந்து பல மடங்காக்கிப் பார்க்கவேண்டியிருக்கிறது. அது அதி பயங்கரமான நிலையை உணர்த்துகின்றது.

இலங்கையில் சுற்றுலாத்துறை அந்நியச் செலாவணி வருமானத்துக்குரிய ஒரு துறையாக முதன்மைப்படுத்தப்பட்டுவரும் நிலையில், சிறுவர் பாலியல் ஒழுக்கக்கேடுகள் சுற்றுலாத்துறையின் ஒரு பாகமாக வளர்ந்துவருது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் கடந்த காலங்களில் தீவிரமாக இருந்துள்ளன. சிறுவர் ஒழுக்கக்கேடுகளுக்கான சொர்க்கமாக இலங்கை சுற்றுலாவிகள் மத்தியில் பரப்புரை செய்யப்பட்ட சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன என்பதை மறந்துவிடமுடியாது. தற்போது அந்நியச்செலாவணியை ஈட்டுவது, பொருளாதாரத்தை மீட்பது ஆகியவற்றின் மீதே ஆட்சியாளர்கள் அதிகம் கவனம் செலுத்திவரும் நிலையில் அந்த முதன்மை நோக்கத்துக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய இதுபோன்ற சம்பவங்களை அவர்கள் புறக்கணிப்பதற்கான வாய்ப்புகளையும் நிராகரித்துவிட முடியாது. எனவே அதன் மீதும் கவனம் குவிக்கப்படுவதும் எச்சரிக்கையோடு இருப்பதும் அவசியம்.

இலங்கையில் சிறுவர் பாலியல் முறைகேடுகள் சுற்றுலாவிகளால் நிகழ்வதிலும் பார்க்க குடும்ப உறவினர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களால் நிகழ்வதே அதிகமாக இருக்கின்றது. போதிய வருமானமின்மை, குடும்பங்களின் சிதைவுகள், வெளிப்படையான பாலியல் தேவைப் பூர்த்திக்கான வசதியின்மை போன்றன இதற்கான காரணங்களாக இருக்கின்றன. இவற்றை நிவர்த்திப்பதற்கான தனியான திட்டங்கள் குறித்து அரசு அக்கறை செலுத்தவேண்டும்.

சிறுவர் பாலியல் முறைகேடுகளைத் தடுக்க பாலியல் கல்வி தொடர்பில் சிறுவர்களுக்குத் தெரியப்படுத்துவது மிகவும் அவசியமானது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரும் ஸ்ரீஜயவர்தபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார். பாலியல் கல்வி அவசியம்தான் என்றபோது அது மட்டுமே இந்த நிலமையை மாற்றப் போதுமானதாக இருக்கும் என்று தோன்றவில்லை. அதையும் தாண்டிய சமூக அக்கறை தனியான செயற்றிட்டங்கள் என்பனவும் அதற்கு அவசியமானவை என்று தெரிகின்றது.



## குழந்தை பெற்றுக்கொள்ளத் தயங்கும் இலங்கையர்கள்

**பிரகீத் சம்பத் கருணாதிலக்க**

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி உணவு கிடைப்பதில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மக்கள்தொகை வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 2021, -2022, -2023 ஆண்டுகளில் திருமணம் செய்துகொண்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் உடனடியாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள். மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் வழங்கிய தரவுகளின்படி இது தெளிவாகிறது. இதன் விளைவாக, முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், புதிதாகப் பிறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 100,000 அளவில் குறைந்துள்ளது.

2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் குழந்தை பெற்றுக் கொள்ளவேண்டாம் என்று முடிவு செய்த புதுமணத் தம்பதிகளின் கூற்றுப்படி, கொவிட் பெருந்தொற்று அதற்கொரு காரணம். தொற்று நோயைக் கட்டுப்படுத்த வழங்கப்பட்ட தடுப்பூசிகளின் காரணமாக, மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் அவர்கள் குழந்தை பெறுவதை தாமதப்படுத்த வேண்டியிருந்தது. கொவிட் தொற்று ஒரு வருட காலத்தில் தணிந்திருந்தாலும், புதிதாகத் திருமணமான தம்பதிகள் குழந்தைகளைப் பெறுவதற்குத் தொடர்ந்தும் தயக்கம் காட்டுகின்றனர். நாட்டின் பொருளாதார நெருக்கடியே இதற்கான காரணம்.

"வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க முடியாத சூழ்நிலையில் குழந்தைகளை வளர்ப்பது தேவையற்ற சுமை என்று அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் குழந்தைகளை நேசிக்கிறோம், ஆனால் சொந்தக் குழந்தைகள் இப்போதைக்கு வேண்டாம் என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். இது எங்களின் தனிப்பட்ட முடிவு. நாங்கள் கடனில் மூழ்கி திருமண வாழ்க்கையில் நுழைந்தோம், நாங்கள் வாங்கிய கடனை அடைக்க குறைந்தது ஆறு ஆண்டுகள் ஆகும். தற்போது, நாங்கள் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கிறோம், எங்கள் வருமானம் கடன்களைத் தீர்க்கவும், வாடகை, அன்றாடத் தேவைகள் மற்றும் பயன்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்தவும் போதுமானதாக இல்லை. கூடுதலாக, பணியிடத்தில் நிலவும் சிக்கல்கள் காரணமாக வேலை பாதுகாப்பு பற்றிய கவலைகளும் உள்ளன" என்கிறார்கள் புது மணத் தம்பதியினரில் பலர்.

"இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதைத் தடுக்க குழந்தை பெறுவதில்லை என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். பிரசவத்திற்குப் பிறகு ஏற்படும் நிதிச் சுமை மற்றும் பிற தேவைகளுக்கான செலவுகள் - பெரும் சவாலாக உள்ளன. இந்தச் சூழ்நிலையில் குழந்தைகளுக்குச் சரியான கல்வியை வழங்குவதும் கவலைக்குரியது. இதனால்தான் நாங்கள் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்துள்ளோம், என்று வேறு சில புதுமணத் தம்பதியர் கருத்து தெரிவித்தனர்.

குழந்தைகளை உலகிற்கு கொண்டு வர அன்பு மட்டும் போதாது என்று பலரும் வாதிடுகின்றனர். தமது பிள்ளைகளுக்கு இலங்கையில் சரியான கல்வி கிடைக்காது என அவர்கள் அச்சமடைந்துள்ளனர். ஒரே ஒரு குழந்தை உள்ள குடும்பங்கள்கூட தங் கள் மாத வருமானத்தை சமாளிக்க முடியாமல் தவிக்கின்றன. சமீபத்திய வற் அதிகரிப்பு எல்லாவற்றின் விலையையும் உயர்த்தியுள்ளது. கூடுதலாக, இலங்கையில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு குறைந்த வேலை வாய்ப்புகளே உள்ளன. இடம் பெயர்வு என்பது பொதுவான கருத்தாக மாறி வருகிறது. படித்த பிறகும் நாம் படும் இன்னல்களை நம் பிள்ளைகளும் ஏன் எதிர்கொள்ளவேண்டும். அவர்களுக்கு அந்த நெருக்கடி வேண்டாம். எனவே, நாங்கள் குழந்தைகளைப் பெறுவதை ஒத்திப் போடுவதற்கு முடிவு செய்துள்ளோம்" என்று மற்றொரு தம்பதியினர் தெரிவித்தனர்.

மேலும், பல புதுமணத் தம்பதிகள் மற்றும் திருமணம் செய்துகொள்ளும் தருவாயில் உள்ளவர்கள், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமல் திருமணம் முடித்த உடனேயே வேலை தேடி ஏதாவது வெளிநாடுகளுக்குச் செல்லவே ஆசைப்படுகின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் பதிவுத் திருமணம் செய்துவிட்டு திருமண விழாவிற்காக ஒதுக்கி வைத்த பணத்தை வெளிநாடு செல்லப் பயன்படுத்துகிறார்கள். பெரும்பாலும் கணவன் முதலில் வெளிநாடு சென்றுவிடுகிறார். பின்னர் சில காலங்களில் மனைவியையும் அங்கு அழைத்துக் கொள்கிறார்கள். அத்தகைய தம்பதியருக்குக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது முன்னுரிமைக்குரியதல்ல. ஏனெனில் அவர்களின் எதிர்காலம் வெளிநாடுகளில் அவர்கள் பெறும் வேலை வாய்ப்புகளைப் பொறுத்தது. அவர்கள் அந்த நாடுகளில் திடமான வாழ்க்கையை எதிர்கொள்ளும் வரை குழந்தைகளைப் பெற மறுக்கிறார்கள்.

தங்களுக்காகத் தமது பெற்றோர்கள் கடும் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டனர் எனவும், இப்போது அவர்கள் நாட்டின் பொருளாதாரச் சூழலால் தமது பெற்றோர் மேலும் சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில் தாம் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டால் எல்லோருடைய எதிர்காலமும் சிக்கலுக்குள்ளாகிவிடும் என்பதால் குழந்தை பெற்றுக்கொள்ள மறுப்போரும் உள்ளனர்.

புதிதாகத் திருமணமான தம்பதிகளில் கணிசமானோர் குழந்தைகளைப்பெறுவதைத்தவிர்க்கிறார்கள் என்ற உண்மையை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்கள். இதன் விளைவாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களத்தின் குறிப்பிட்ட அறிக்கைகளை வெளியிடுவதற்கு குறிப்பிட்ட அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வேறொரு பிரச்சினை உருவாகாமல் தடுப்பதற்காகவே இந்த தயக்கம் காட்டப்படுவதாக திணைக்களத்தின் சார்பில் பேச வல்ல ஒருவர் உறுதிப்படுத்தினார்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தைச் சேர்ந்த அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில், திருமணப் பதிவுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தற்போதைய பொருளாதார சவால்களால் திருமணங்கள் நிறுத்தப்படுகின்றன. இந்தப் பிரச்சினை வெளிப்பட்டால், குறிப்பாக இந்த ஆண்டு ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் நெருங்கி வரும் நிலையில் அவது வெளிப்பட்டால், அது அதிகாரத்தில் உள்ளவர்களின் வாக்காளர் தளத்தைக் கணிசமான அளவில் பாதிக்கும் என்ற அச்சம் காரணமாக தரவுகள் மறைக்கப்படுகின்றன என்கிறார்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் சமீபத்திய தரவுகளை வெளியிடப்படுவது தாமதமானாலும், ஜூலை 2012 முதல் ஜூன் 2023 வரையிலான பிறப்புப் பதிவு பதிவுகளின்படி, புதிதாகப் பிறந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 100,000 என்ற எண்ணிக்கையால் குறைந்துள்ளது. ஜூலை 2012 முதல் ஜூன் 2013 வரை, 352,450 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2013 முதல் ஜூன் 2014 வரை, 361,800 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2014 முதல் ஜூன் 2015 வரை 342,108 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2015 முதல் ஜூன் 2016 வரை 331,525 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2016 முதல் ஜூன் 2017 வரை 322,089 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2017 முதல் ஜூன் 2018 வரை 325,741 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2018 முதல் ஜூன் 2019 வரை 329,177 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2019 முதல் ஜூன் 2020 வரை 299,875 புதிய பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஜூலை 2020 முதல் ஜூன் 2021 வரை 295,415 புதிய பிறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2021 ஜூலை முதல் 2022 ஜூன் வரை 289,863 ஜூலை 2022 முதல் ஜூன் 2023 வரை 268,920 புதிய பிறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# இளையராஜா மகள் பவதாரணியின் பூதவுடல் இந்தியாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது

## அஞ்சலி செலுத்த இலங்கை வந்தார் யுவன்

மறைந்த பின்னணி பாடகியான பவதாரணியின் பூதவுடல் நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 1.45 மணியளவில் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் யு.எல். 127 என்ற விமானத்தினூடாக சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இசைஞானி இளையராஜாவின் மகளும், மறைந்த பின்னணி பாடகியுமான பவதாரணியின் பூதவுடலை பார்ப்பதற்காக அவரின் சகோதரரும் பிரபல இசையமைப்பாளருமான யுவன் சங்கர் ராஜா, இயக்குநர் வெங்கட் பிரபு மற்றும் தமிழ் திரைப் பிரபலங்கள் நேற்று அதிகாலை இலங்கை வந்தடைந்தனர். (05)



# பாலியல் துஷ்பிரயோகங்கள் இலங்கையில் அதிகரிப்பு

இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துவருகின்றன என சிறுவர் மற்றும் மகளிர் பொலிஸ் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 18 வயதுக்கு உட்பட்ட 1,502 பேர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பாலியல் கல்வி தொடர்பில் சிறுவர்களுக்குத் தெரியப்படுத்துவது மிகவும் அவசியமானது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரும் ஸ்ரீஜயவர்தபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார். (05)

# மின்சார வேலியில் சிக்குண்டு யானை பரிதாபகரமாக இறப்பு

நிகவரெட்டிய வனஜீவராசிகள் திணைக்களத்திற்குட்பட்ட பகுதியில் காட்டுயானையொன்று மின்சார வேலியில் சிக்குண்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

குறித்த யானையின் சடலமானது வெள்ளிக்கிழமை அதிகாலை நிகவரெட்டிய - திவுல்லேவ திகன்னேவ பகுதியில் வைத்து வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது உயிரிழந்த காட்டு யானை சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த அதிவலுக் கொண்ட மின்சாரக் கம்பியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த காட்டு யானை சுமார் 8 அடி உயரம் எனவும் 30 வயது மதிக்கத்தக்கது என்றும் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் காணியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு நிகாவெரெட்டிய நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் உயிரிழந்த காட்டுயானை நிகவரெட்டிய மிருக சிகிச்சைப் பிரிவின் வைத்தியரால் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த உள்ளதாக வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (05)

# மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

## அச்சத்தில் மக்கள்

தேயிலைதோட்டப்பகுதிகளில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு உயிராபத்துள்ளதாகவும் மலையக தோட்டப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சிறுத்தைகள் தேயிலைச் செடிகளுக்குள்பதுங்கியிருந்து அவ்வழியே செல்வோரை தாக்கிய பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கூறும் அதேவேளை, அண்மையில் தேயிலைச் செடிக்குள் இறந்து கிடந்த நாயின் உடலை உண்டுகொண்டிருந்த சிறுத்தையொன்று, அப்பகுதியில் தேயிலை பறித்துக்கொண்டிருந்த தொழிலாளி ஒருவரைத் தாக்கியதாகவும் கூறுகின்றனர்.

இது தொடர்பாக தொழிற்சங்க பிரதிநிதிகள் கூறுகையில் -+

பொகவந்தலாவையிலுள்ள தோட்டமொன்றில்வேலைசெய்யும் தொழிலாளிஒருவர்பணியிடத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது சிறுத்தையால்தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்குள்ளானார்.

சிறுத்தைகளின் தாக்குதலிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கவும், சிறுத்தைகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள மக்கள் பொறி வைத்து சிறுத்தைகளைக் கொல்வதைத் தடுக்கவும் வனவிலங்கு அதிகாரிகள் சிறந்த பொறிமுறையை உருவாக்க வேண்டும்' என்கின்றனர்.

மேலும், ரந்தெனிகல வனவிலங்கு கால்நடைவைத்திய பிரிவின்வைத்தியநிபுணர்ஒருவர், தேயிலைச்செடிகளுக்கு மத்தியில் சிறுத்தைகள் நடமாடுவதை தொழிலாளர்கள் கண்டால், உரத்த குரலில் சத்தமிட்டு சிறுத்தைகளை பயமுறுத்திதுரத்த முயற்சிக்கலாம். ஆனால், அந்த சிறுத்தைகளை

# ஹற்றனில் 10 ஏக்கர் காணி தீயினால் எரிந்து பருநாசம்

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்டேடன் தோட்டத்துக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணி தீயால் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த நிலப்பரப்பிற்கு யாராவது தீ வைத்திருக்கலாம் என ஹற்றன் ருவன்புர பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தீயானது வனப்பகுதிக்கு அருகில் உள்ள தேயிலை தோட்டத்திற்கு பரவியதையடுத்து, ருவன்புர பகுதியில் வசிக்கும் மக்கள் தீயைக் கட்டுப்படுத்தினர்.

அத்துடன் இந்தப் பகுதியில் கடும் வரட்சியான வானிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# 'மன்னார் தீவை கடலுக்குள் அமிழ்த்தாதே': சுற்றுச்சூழலை காக்குமாறு போராட்டம்












மன்னாரில் இடம்பெற்று வருகின்ற சுற்றுச்சூழலை அழிக்கும்சட்டவிரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்;. மக்கள் நலமாக வாழ நாட்டின் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி மன்னாரில் (வெள்ளிக்கிழமை) காலை மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அத்தோடு, மன்னாரில் இடம்பெற்று வரும் பாரிய களிமண் அகழ்வு மற்றும் உயர்மின்வலு காற்றாடிகள் அமைக்கும் திட்டங்கள் காரணமாக மன்னார் தீவு மக்களது இருப்பில் பிரச்சினை, வாழ்வாதார பாதிப்பு, சட்டவிரோத காணி அபகரிப்பு, மரங்கள் அழிப்பு போன்றவற்றால் மன்னார் தீவு கடலுக்குள் அமிழப் போவதாகவும் இதன்போது போராட்டக்காரர்கள் எடுத்துரைத்தனர்.

மன்னார் பிரதான பாலத்தில் தொடங்கிய இந்த போராட்டம், சில மணிநேரங்கள் மாவட்ட செயலகத்தின் முன்னாலும் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'மனித உயிர்களை காவு கொள்ளுகின்ற மண் அகழ்வு, காற்றாலை நடவடிக்கைக்கு காணிகளை விற்காதே', 'மண் அகழ்வை நிறுத்தாவிடில் நன்னீர் மாசடைவதுடன் உப்புத் தன்மையும் அதிகரிக்கும்', 'மன்னாரின் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம்', 'கனியவள மண் அகழ்வு மன்னார் மக்களின் வாழ்வாரத்தை அழித்துவிடும்' போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்த பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர். மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் எற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் மதத் தலைவர்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு தெற்கு முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வடக்கு, தெற்கு முக்கியஸ்தர்கள், இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் எனப்பலர் உரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்ற போராட்டக்காரர்கள், அங்கு மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் (காணி) ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு மகஜர் ஒன்றை கையளித்தனர். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்




அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலுமு, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park



கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# வவுனியா வடக்கு கோயில்புளியங்குளம் முத்தமிழ் வித்திக்குக் குடிநீர்த் தாங்கி





வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பின்தங்கிய பாடசாலையான கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தின் குடிநீர் பிரச்சினைக்கு நீண்ட காலத்துக்குப் பின்னர் தீர்வு காணும் வகையில் குடிநீர் தாங்கி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, கோயில்புளியங்குளம் மஹா விஷ்ணு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூர குருக்களின் நிதிப் பங்களிப்பில் வவுனியா ஊடகவியலாளர்களால் அமைக்கப்பட்ட குடிநீர் தாங்கி பாடசாலை அதிபர் முன்னிலையில் வியாழக்கிழமை திறந்துவிடப்பட்டது.

இதன்போது, அதிதிகள் இந்த குடிநீர் தாங்கியை திறந்துவைத்ததுடன், பெயர்ப் பலகையையும் திரைநீக்கம் செய்தனர்.

அதனை தொடர்ந்து, அதிதிகளால் மாண வர்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டது. அத்தோடு, இந்நிகழ்வின் நினைவாக மர நடுகையும் இடம்பெற்றது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள்குடிநீரின்றிபல்வேறுசிரமங்களை எதிர்கொள்வதாக கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அதனை தொடர்ந்து, அதிபரின் வேண்டுகோளுக்கிணங்கவவுனியாஊடகவி-யலாளர்கள் புலம்பெயர் தேசத்தில் தற்போது வசிக்கும் வவுனியா, கோயில்புளியங்குளம் மஹா விஷ்ணு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூர குருக்களிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய, அவரால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் மோட்டருடன் கூடிய குழாய் கிணறு நிர்மாணிக்கப்பட்டு, குடிநீர் தாங்கியும் நிறுவப்பட்டது.

பாடசாலை அதிபர் மா.அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா உதவிப் பிரதேச செயலாளர் சுஜீபன் பிரியதர்சினி, செட்டிகுளம் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜன், ஊடகவியலாளர்களான ந.கபில்நாத், கி.வசந்தரூபன், சி.திவியா, வ.பிரதீபன், இ.சங்கர், சிவில் சமூக பாதுகாப்பு குழுத் தலைவர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# தகனத்துக்கு தயாராகவிருந்த சடலம் தொடர்பில் உறவினர்கள் சந்தேகம்

## உடல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது

மீரிகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்ட பின்னர் அவரது சடலத்தைத் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது குறித்த சடலம் வத்துபிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணின் இறப்பில் உறவினர்கள் சந்தேகம் எழுப்பியதையடுத்தே சடலத்தை மேலதிக விசாரணைகளுக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றதாக மீரிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீரிகம பிரதேசத்தில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் வசித்து வந்த 81 வயதான பெண்ணின் சடலமே இவ்வாறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

வெயாங்கொட பிரதேசத்தில் வசிப்பவர் எனக் கூறப்படும்இந்தபெண்சுமார்ஆறு, ஏழுமாதங்களுக்கு முன்னர் அவரது நெருங்கிய உறவினரால் முதியோர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அங்கிருந்தபோது குறித்த பெண், சுகவீனமடைந்ததையடுத்து மீரிகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சில நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் நிமோனியா காய்ச்சலே அவரது மரணத்துக்கு காரணம் எனவும் வைத்தியர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# குழந்தை பெற்றுக்கொள்ளத்..............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

2013 தரவுகளுடன் ஒப்பிடுகையில், 2023 இலங்கையில் புதிய பிறப்பு பதிவுகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியை அவதானிக்க முடியும். 2013 உடன் ஒப்பிடும்போது, 2023இல் 83,530 புதிய பிறப்புகள் குறைந்துள்ளன. புதிதாக திருமணமாகி குழந்தை இல்லாதவர்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள பௌத்தர்கள்.

அண்மையில்திருமணமானமுஸ்லிம்இளைஞர் ஒருவர், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக முஸ்லிம் சமூகமும் குறைவான குழந்தைகளையே பெற்றுக்கொள்கின்றனர் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். பாரம்பரியமாக, முஸ்லீம் குடும்பங்களில் சுமார் 3- முதல் 5 குழந்தைகள் உள்ளனர்.

எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார சவால்களை கருத்தில் கொண்டு, அவர்களின் சமூகத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது 2 முதல் -3 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் சமீபத்திய தரவுகளின்படி, இலங்கையில் ஒரு குடும்பம் இரண்டு குழந்தைகள் என்று எண்ணிக்கையை மட்டுப்படுத்தியுள்ளது. குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் இலங்கை பொலிஸாரிடமிருந்து பெறப்பட்ட தரவுகள், 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 2087 பதின்வயது தாய்மார்கள் பதிவாகியுள்ளனர் என்கிறது. இந்த கர்ப்பங்கள் பெரும்பாலும் நெருங்கிய உறவுகள் அல்லது பிற சூழ்நிலைகளால் ஏற்பட்டது என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டு சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளபடி, இலங்கையில் ஒவ்வொரு நாளும் 16 குழந்தைகள் ஊனமுற்றவையாகவே பிறக்கின்றன. வருடாந்தம் 5800 குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறப்பதாகவும் கணக்கெடுப்பு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அந்த அறிக்கையின்படி, தினமும் 16 குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறக்கின்றன. கூடுதலாக, சுகாதாரத் துறையின் தரவுகளின் அடிப்படையில், 7 மாதங்களுக்குப் பிறகு கருப்பையில் இறக்கும் கருக்களின் எண்ணிக்கை சுமார் 1900. 2016 இன் சமீபத்திய அறிக்கையின்படி, ஒவ்வொரு நாளும் 650 சட்டவிரோத கருக்கலைப்புகள் செய்யப்படுவதாக சுகாதாரத் துறை கண்டறிந்துள்ளது. ஒரு வருடத்தில் 240,000 க்கும் அதிகமான கருக்கலைப்புகள் செய்யப்படுவதாகவும் சுகாதாரத் துறை அறிக்கைகள் கூறுகின்றன.

இதற்குக் காரணம், சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியபடி, திருமணம் செய்து கொள்ளாமல், ஒன்றாக வாழ்வது என்ற கருத்தை இளைஞர்கள் அதிகளவில் ஏற்றுக்கொள்வதுதான். கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது குழந்தைகளைப் பெறுவது கடினம் என்பதைத் தொடர்ந்து, அவர்கள் திருமணமாகாது ஒன்றாக வாழ்வது என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நபர்கள் கர்ப்பத்தைத் தடுக்க எடுக்கும் பல்வேறு மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் குறைபாடுகளுடனான குழந்தைகளின் பிறப்பு அதிகரிக்க வழிவகுத்தது.

எனவே, பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இந்த போக்கு குறித்து கவனம் செலுத்த வேண்டும் என சுகாதார திணைக்கள அதிகாரி ஒருவர் வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்திரமாலி டி சில்வா, புதிதாக திருமணமானவர்களுக்கு குழந்தை இல்லை என்பதை உறுதிப்படுத்த, அதற்கான தேவையான தரவுகள் தற்போது எங்களிடம் இல்லாததால், நாங்கள் ஒரு கணக்கெடுப்பை நடத்தவேண்டும்.

இருப்பினும், முந்தைய ஆண்டுகளை ஒப்பிடுகையில், புதிய பிறப்புகளின் பதிவு குறைவாக உள்ளது, மேலும் திருமணங்களிலும் வீழ்ச்சி உள்ளது. புதிய பிறப்புகள் குறைவதற்கு கொவிட் தொற்று பெரும் பங்களித்தது என்றார்.

அப்படியானால், இந்த தேசம் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய மற்றொரு சோகமான நிலை. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் எதிர்காலத்தில் இந்த நாடு நம்பிக்கைக்குரிய குழந்தைகளின் தலைமுறையைக் கொண்டிருப்பது ஒரு கனவாகவே இருக்கும். எனவே, இந்த விடயங்கள் அனைத்திலும் அதிகாரிகள் விரைந்து கவனம் செலுத்தி உறுதியான தீர்வை வழங்கவேண்டும்.

(மூலம்: டெய்லி மிரர்)



# சட்ட விரோதமாக சங்குகள் பிடித்த மூவர் புத்தளம், கற்பிட்டியில் கைது

புத்தளம் , கற்பிட்டி கடலில் சட்ட விரோதமான முறையில் சங்குகள் பிடித்த குற்றச்சாட்டில் மூவர் வியாழக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள்புத்தளம் , கற்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 12 முதல் 48 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இலங்கை கடற்படையினரால் கற்பிட்டி கடற்பரப்பில் செய்யப்பட்ட சோதனையின்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் படகு ஒன்று காணப்பட்டுள்ளது.

தொடர்ந்து விசாரித்தபோதே இந்த படகில் இருந்து சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட 1,856 சங்குகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து,கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட படகு மற்றும் சங்குகளுடன் மேலதிக விசாரணைக்காக புத்தளம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# யுக்தியவிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மிரட்டல் அச்சுறுத்தல்

## கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

கொழும்பு கொள்ளுப்பிட்டி லிபேர்ட்டி சுற்றுவட்டத்தில் வியாழக்கிழமை மாலை யுக்திய நடவடிக்கைக்கு எதிராக இடம்பெற்றுக்கொண்டிருந்த ஆர்ப்பாட்டத்தை இனந்தெரியாத நபர்கள் குழப்பியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களைத் துன்புறுத்தி மிரட்டும் இனந்தெரியாத நபர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு மிரட்டுவதை காண்பிக்கும் வீடியோ வெளியாகியுள்ளது.

தனது முகத்தை மூடிய நபர் ஒருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நபர்ஒருவரை தாக்குவதைவீடியோகாண்பித்துள்ளது. இனந்தெரியாதநபர்கள்ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணுடன் வாக்கு-வாதத்தில் ஈடுபடுவதையும் காணமுடிந்துள்ளது. (05)

# தொடருந்தில் செல்ஃபி எடுக்க முயன்ற ரஷ்யப் பெண் தவறி வீழ்ந்து காயம்

*ரயிலில் பயணித்த ரஷ்ய பெண்ணொருவர் செல்ஃபி எடுக்க முற்பட்டபோது தவறி வீழ்ந்து பலத்த காயமடைந்து தெமோதர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*25 வயதுடைய கிறிஸ்டினா அலக்வானா என்பரே இவ்வாறு காயமடைந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர் .*

*இந்தப் பெண் நேற்று (வெள்ளிக்கிழமை) ஹிக்கடுவையில் இருந்து எல்லைக்கு சென்ற ரயிலில் பயணித்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*மேலும் இவரது கடவுச்சீட்டு இவர் தங்கியிருந்த ஹோட்டலில் வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)*

## ரணிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்திறமையானதலைவர்களுடன் இணைந்து இந்தத் தீர்மானத்தினை எடுத்துள்ளேன்.

சிறந்த தலைவர்களின் தீர்மானங்களை நாம் ஆதரித்தோம். பிழையான தீர்மானங்களை எடுத்த போது அதனை முது கெலும்புடன் எதிர்த்தோம். நாட்டு மக்கள் சகலருக்காகவும் முக்கிய தீர்மானத்தினை எடுப்பதாக நாம் பகிரங்கமாக அறிவித்தோம்.

இந்தத் தீர்மானத்தினை எடுக்காது விட்டிருந்தால் எமக்கான அரசியல் மட்டுமல்ல நாட்டு மக்களின் எதிர்காலமும் குன்றிப்போகும் என்று நாம் குறிப்பிட்டோம். ஆனால் தலைவர்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. இதனால் தான் நாம் எந்தவிதமான அச்சங்களையும் தவிர்த்து தற்போது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இந்த இலட்சியப் பயணம் தொடர்ச்சியாக இடம்பெறும் என்றார்.

நாடளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா தனது உரையில் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டின் தலைவர் என்று பலர் அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். ஒவ்வொருவரைக் காண்பித்து அவர்களுடன் இணைந்தால் இதனைச் செய்ய முடியும், அதனைச் செய்ய முடியும் என்று மேடை கிழியும் வகையில் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றார்.

சம்பளத்தை வழங்குவதற்கும், சமுர்த்தி நிதியை வழங்குவதற்கும் மாத்திரமே அரசிடம் நிதி உள்ளது. அதனாலேயே சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிகள் கோரப்பட்டது. அப்போது நாட்டின் நிலைமையை மேம்படுத்துவதற்காக 15 விடயங்களைக் கூறி அதனை நடைமுறைப்படுத்துமாறு கோரி நாணய நிதியம் நிதி உதவியை வழங்கியது.

சிலர் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து விலகி நிற்குமாறு கோரினார்கள். அவ்வாறு அரசியல் மேடைகளில் கூறுபவர்கள் எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு என்ன வழி என்பதையும் கூற வேண்டும். மக்களின் ஆணையைப் பெற்ற அரசு நிறுவப்படவேண்டும் என்பதை நாம் நம்புகின்றோம்.

பொய்யாக கூக்குரல் இடுவதால் பயனில்லை. ஆகவே எம்முடன் எமது கூட்டணியுடன் இணைந்து கொள்ளுமாறு நான் பகிரங்கமான அழைப்பு விடுக்கின்றேன். எம்மிடத்தில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. மிகவும் வெளிப்படையான அரசியல் பயணம் இதுவாகும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தனது உரையில் தெரிவித்ததாவது:

நீங்கள் இங்கு கூடியிருக்கின்றீர்கள். நீங்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவும் முடியும். வாக்கெடுப்பிலிருந்து விலகியிருக்கவும் முடியும். அது உங்களின் விருப்பம் நாம் அதனை மாற்றியமைக்கப்போவதில்லை.

எமது கூட்டணியானது நாட்டின் எதிர்காலத்தினை மையப்படுத்தியது. எமது கூட்டணிக்கு தற்போது சின்னமில்லை. பெயரில்லை. ஆனால் எதிர்காலத்தில் பெரும் கூட்டணியை அமைப்பதற்கான அடித்தளமே இதுவாகும் என்பதை நம்பிக்கையுடன் கூறுகினறேன்.

சில அரசியல் கட்சிகள் பெயர்ப்பலைகளை மட்டுமே காட்சிப்படுத்துகின்றன. முக்கியமான சிலர் கொழும்பில் ஊடக சந்திப்பை மாத்திரமே நடத்துகின்றனர். ஆனால் மக்கள் அவர்களுடன் இல்லை. ஆனால் இலச்சினையே இல்லாத எம்முடன் இலட்சக்கணக்கான மக்கள் இணைந்துள்ளனர்.

அதற்கு எமது இந்த முதலாவது கூட்டம் சாட்சியமாகின்றது. ஆகவே எமது கூட்டணியுடன் அனைத்து முற்போக்கு சக்திகளும் இணைந்து செயற்படுவதற்கு வருகை தருமாறு நான் அழைப்பு விடுகின்றேன் என்றார்.

இந்தக் கூட்டணியின் நேற்றையதினம் 14 மாகாண சபை உறுப்பினர்களும் 7 தொழிற்சங்க பிரதிநிதிகளும் இணைந்திருந்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுப்பது ரணில் விக்ரமசிங்கவோ நாடாளுமன்றமோ அல்ல

## ரில்வின் சில்வா எடுத்துரைப்பு



ஜனாதிபதி தேர்தலை ஆணைக்குழுவைத் தவிர வேறு எவரும் தீர்மானிக்கத் தேவையில்லையென்று தேர்தல் ஆணைக் குழு அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் இருதடவைகள் ஊடகங்களுக்கு கூறியுள்ளார் என களுத்துறை மாவட்ட மீனவர் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்குத்தான் இருக்கிறது. எனவே, இந்த வருடம் செப்ரெம்பர் 17 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 17 ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அதில் சந்தேகமில்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திசாநாக்க வெற்றி பெறுவார் என்பதில் சந்தேகமில்லை. எம்மவர் ஜனாதிபதியானதன் பின்னர் இந்த நாடாளுமன்றம் எமக்குத் தேவையில்லையே. எனவே, இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய நாடாளுமன்றம் ஒன்றை ஸ்தாபித்து இந்த நாட்டை முன்னேற்ற வேண்டும்.

அநேகமாக முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று நாங்கள் நினைக்கிறோம். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு தேசிய மக்கள் சக்தியே அன்றி வேறெதற்கும் இல்லை.

சாதாரண மக்களின் ஆய்வுகள் மாத்திரம் அல்ல. உளவுத்துறை தகவல்களும் அதனைத்தான் கூறுகின்றன. எனவே, எவரும் பதற்றமடையத் தேவையில்லை. இதனால் இப்போது ஆட்சியாளர்கள்பதற்றமடைந்துள்ளார்கள். எங்களிடமிருந்துதவறுதலாகவெளிவரும் ஒரு சொல்லை பிடித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

அதை வைத்துக் கொண்டு அவர் களுக்கு விரும்பிய கதையை புனைவார்கள். அந்தக் கதைக்கு ஊடக உரையாடல் இடம் பெறும். அதற்காக பிக்கெட்டிங் செய்வார்கள். பத்து பதினைந்து பேரை சேர்த்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். எமது கொள்கையை நாம் தெளிவுப்படுத்துகின்ற போதிலும் அதற்கு அவர்கள் செவிசாய்க்க மாட்டார்கள்.

ஏனென்றால், அந்தளவிற்கு தேசிய மக்கள் சக்தி அவர்களுக்கு சவாலாக அமைந்துள்ளது.

எனவே, இந்த நாட்டை நாசமாக்கிய சக்திகள் பயந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் எங்களுக்கு எதிராக சேறுபூசுகிறார்கள். அவதூறு கற்பிக்கிறார்கள். - என்றார். (05)

# பம்பலப்பிட்டி ரயில் நிலைய மின் இணைப்பு கட்டணம் செலுத்தாதமையால் துண்டிப்பு

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் புதன்கிழமை முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நிலுவைத் தொகையை செலுத்தாதன் காரணமாகவே மின் சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் மின்சார கட்டண நிலுவைத் தொகை 877,741 ரூபா என ரயில்வே அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த மின்சார துண்டிப்பின் காரணமாக குப்பி விளக்குகள் மற்றும்மெழுகுவர்த்திகளை ஏற்றிவைத்து அதிகாரிகள் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் ஒலிபெருக்கி மூலம் ரயில் நிலையத்தில் அறிவிப்புகள் செய்யப்படுவதில்லை எனவும் டிக்கெட் வழங்குவதற்கு குப்பி விளக்குளை பயன்படுத்துவதாகவும் ரயில்வே அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 24ஆம் திகதி ரயில்வே திணைக்களத்தால் மின்கட்டணத்தை செலுத்துவதற்கான காசோலை வழங்கப்பட்ட போதிலும் ரயில் நிலையத்தில்மின்சாரம்வெள்ளிக்கிழமை வரை துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிந்திய தகவலின் படி வெள்ளிக்கிழமை 12 .30 மணியளவில் பம்பலப்பிட்டி ரயில் நிலையத்திற்கான மின்சாரம் மீள வழங்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரி வித்துள்ளது. (05)

# பரீட்சைக்கு முன்னரே வினாத்தாள் வெளியீடு: சந்தேகநபர்கள் மூவருக்கும் விளக்கமறியல்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானம் 1 மற்றும் 2 வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியான விவகாரம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவரும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை பிரதான நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான நவோமி விக்ரமரத்னவே இவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பரீட்சைக்கு முன்னரே இந்த வினாத்தாள்கள் வெளியான விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் இதுவரை மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (05)

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆராயவில்லை

## கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண கருத்து



நிகழ்நிலை பாதுகாப்பு சட்ட மூலம் முதலில் வர்த்தமானியில் வெளியானவேளை சட்டமா அதிபர் திணைக்களம் அதனை ஆராயவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதலில் இந்த சட்டமூலம் வர்த்தமானியில் வெளியானது.

நாங்கள் இதற்கு எதிராக உயர்நீதிமன்றம் சென்றோம். சட்டமா அதிபர் திணைக்களம் அந்த சட்டமூலத்தில் 30 திருத்தங்களை முன்வைப்பதாக தெரிவித்தது என அவர் தெரிவித்துள்ளார்.

ஒருசட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டால் சட்டமா அதிபர் திணைக்களம் அதனை ஆராய்ந்து அது அரசமைப்பிற்கு உட்பட்டதா என்பதைத் தெரிவிக்கவேண்டும். ஆனால் அவர்கள் அதனை தெரிவிக்காததால் அவர்கள் இந்த சட்டமூலத்தை ஆராயவில்லை போலத் தோன்றுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலத்தை ஊடக அமைச்சு தயாரித்தது. நீதியமைச்சு சமர்ப்பித்தது என அரசாங்க வட்டாரங்கள் எனக்குத் தெரிவித்தன. கடந்த காலங்களில் பல தடவை அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட சட்டமூலங்களைத் திருத்துவதற்கு அரசாங்கம் நீதிமன்றில் இணங்கியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றம் இரண்டுநாள்களிற்கு மாத்திரமே நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து விவாதித்தது. அரசாங்கம் அதனை அவசரஅவசரமாக நிறைவேற்ற விரும்பியது போலத் தென்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ள ஜயம்பதி விக்கிரமரட்ண இந்த சட்டம் மக்களின் கருத்து சுதந்திரத்தின் மீது பெரும் தாக்கத்தை செலுத்தும். இதனைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முகநூலில் விருப்பம் தெரிவிப்பது கூட கருத்துதெரிவிப்பது தான் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் குற்றம் என தெரிவிக்கப்பட்டுள்ள விடயத்தினை ஆராயும்போது அரசாங்கம் விரும்பாத ஒரு பதிவை நீங்கள் விரும்பினால் அதற்கு நீங்கள் பழிவாங்கப்படலாம் எனவும் ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

பலகருத்துப்பரிமாற்றங்கள் இணையத்திலேயே இடம்பெறுகின்றன. தங்கள் எண்ணங்களை சொல்வதற்கு பகிர்ந்துகொள்வதற்கு மக்கள் சமூக ஊடகங்களையே பயன்படுத்துகின்றனர் எனத் தெரிவித்துள்ள அவர், இரண்டு தேர்தல்கள் இடம்பெறவுள்ளன அதிகளவான பிரச்சாரங்கள் விவாதங்கள் இணையத்திலேயே இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் தேர்தல்களை மையமாக கொண்டவை என நாங்கள் கருதுகின்றோம். பல வருடங்களில் இவ்வாறான சட்டமூலங்களை நிறைவேற்ற பல வருடங்களாகும் அரசாங்கம் தனது பொருளாதாரக் கொள்கைகளிற்கான மக்களின் எதிர்ப்பை ஒடுக்க முயல்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# அந்தியகால சேவையாளர் மீது கஹதுடுவயில் கோரத் தாக்கு

கஹதுடுவ, தியகம பிரதேசத்தில் உள்ள அந்தியகால சேவை நிறுவனத்திற்கு வந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த அந்தியகால சேவையாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளனர்.

வை.ஜி. நிலந்த என்ற 24 வயதுடையவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இவர் குறித்த நிறுவனத்தில் இருந்து சடலம் ஒன்றை அடக்கம் செய்வதற்காக பெட்டியை தயாரித்துக்கொண்டிருக்கும் போது சம்பவ இடத்துக்கு 5 இனந்தெரியாத நபர்கள் வந்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் அங்கிருந்த நிலந்தவின் மார்பிலும் வயிற்றிலும் கண் பகுதிகளிலும் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்தவர் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் தரையில் வீழ்ந்த நிலையில் இருக்கும்போது நிறுவன பொறுப்பாளர், காயமடைந்தவரை ஹோமாகம வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹதுடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)


# பரீட்சைக்கு முன்னரே வினாத்தாள் வெளியீடு: சந்தேகநபர்கள் மூவருக்கும் விளக்கமறியல்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானம் 1 மற்றும் 2 வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியான விவகாரம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவரும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை பிரதான நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான நவோமி விக்ரமரத்னவே இவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பரீட்சைக்கு முன்னரே இந்த வினாத்தாள்கள் வெளியான விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பொலிஸார் இதுவரை மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (05)


# பண மோசடி பெண் கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தறுவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி 14 பேரை ஏமாற்றி தவணை முறையில் 20 -75 லட்சம் ரூபா பெற்றுக் கொண்டுள்ளதாக வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. கனடாவில் வேலை வாய்ப்புக்காக காத்திருந்த சிலர் இவரது பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றமடைந்துள்ளதுடன் இவர்களுக்கு போலி ஆவணங்களைத் தயாரித்து வழங்கியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குருணாகலை சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட பொத்துஹெர, கொட்டாஞ்சேனை, நீர்கொழும்பு, வத்தளை ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்களே இவரது பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றமடைந்துள்ளனர். கைதான 37 வயதுடைய சந்தேக நபர் வத்தளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞர் உயிரிழப்பு



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். உழவு இயந்திரமும் சிறியரக பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் வள்ளிபுனம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

பட்டா வாகனத்தில் பயணித்த குறித்த இளைஞன் விபத்தில் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உழவு இயந்திரத்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்திற்குள்ளான இரண்டு வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட புதிய கூட்டத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவின் நெருக்கிய சகாக்களான சாகர, வஜிர போன்ற ஐவரின் பணமே பயன்படுத்தப்படுகின்றது. அந்தப் பணத்தின் ஊடாக தேனுக்கு எறும்புகள் வருமென்று எதிர்பார்கின்றார்கள். ஆனால் நாங்கள் எறும்புகள் அல்லர். எம்மிடத்தில் புதிய வேலைத்திட்டமுள்ளது. எமது வேலைத்திட்டத்தினை விரைவில் அறிவிப்போம். அந்த வேலைத்திட்டம் யாராலும் முன்னெடுக்கப்படாதவொன்றாகும் - என்றார்.

## மட்டக்களப்பிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், ஊடகவியலாளர்கள், மத குருமார், சமூக செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலரும் காந்தி பூங்காவின் முன்னால் ஒன்று திரண்டு ஊடகவியலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

'படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச விசாரணை வேண்டும்', 'ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்து', 'படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கொடு', 'எங்கே எங்கே ஊடகவியலாளர் எக்னெலிகொட எங்கே', 'நிகழ்நிலை காப்பு சட்டத்தை வாபஸ்பெறு' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைப் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

நெற்றியில் கறுப்புப்பட்டி அணிந்தும் முழக்கங்களை எழுப்பியவாறு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் பின்னர் கலைந்து சென்றனர்.

இதேபோன்றதொரு ஆர்ப்பாட்டமும் சிறிய ஊர்வலமும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றிருந்தது.

## போதைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படுகின்றன.

பொலிஸாருக்கும், ஏனைய தரப்பிருக்கும் நான் மிகத்தெளிவானதொரு உத்தரவைப் பிறப்பித்துள்ளேன். அதனடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றபோது ஜூன் மாதமாகின்றபோது போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக்குழுவினரை கட்டுக்குள் கொண்டுவர முடியும். ஆகவே இந்தச் செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

அதுமட்டுமன்றி, பெண்களும், சிறுவர்களும், நெருக்கடிகளுக்கு மத்தியில் படிப்பில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கவேண்டும் என்றார்.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையை பிரித்தானிய முடியாட்சியிடம் கேட்பதாகவே இந்தப் போராட்டம் ஒழுங்கமைக்கப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"பிரித்தானிய பேரரசிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் இன்றுவரை எமது தாயக தேசம், சிங்களப்பேரினவாதத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அன்று மறுக்கப்பட்ட நீதியால், இன்று மிகப்பெரிய

இனஅழிப்பை தமிழினம் சந்தித்து நிற்கிறது. தமிழ்த் தேசம் இலங்கை அரசின்

தொடர் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டதோடு, திட்டமிட்ட இனவழிப்பு தொடர்கின்ற சூழலில், பிரித்தானியா உட்பட உலகின் பல நாடுகளில் ஏதிலிகளாக தமிழர்கள் வாழும் நிலையை உருவாக்கியது.

பிறப்பால் சுயநிர்ணய உரிமையை கொண்டுள்ள தமிழர்கள் தன்னாட்சி அதிகாரம் இன்றி நாடற்றவர்களாக வாழ்கிறோம். ஏனெனில் எமது மண் சிறிலங்கா பேரினவாத தேசத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே எமது வலிகளையும் நியாயப்பாடுகளையும், இன்றும் தாயகத்தில் எம்மவர்கள் குரல்வளை நசுக்கப்பட்டு திறந்தவெளிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளதையும் அனைத்துலக மக்களிற்கும் தெரியப்படுத்துவோம்" என்றும் ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிகழ்நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். அதேபோன்று எதிர்க் கட்சியினரும் திருத்தங்கள் செய்யப்படாத சட்டத்தில் சபாநாயகர் கையெழுத்திடக்கூடாது என்று வலியுறுத்தியிருந்தனர்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளுக்கும் விடுத்துள்ள அழைப்புக்கான காரணம் தேசிய அரசு அல்ல. அது தேசிய ஒன்றிணைவுக்கான அழைப்பாகும்.

தேசிய வேலைத்திட்டம் முன்னோக்கி முன்னெடுக்கப்படுவதற்கு முழுமையான தேசமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறான நிலையில் வேறு யாராவது இந்த விடயத்தினை கையாண்டு தோல்வி ஏற்பட்டால் நாடு மீண்டும் வங்குரோத்து அடைந்துவிடும் ஆபத்துக்கள் காணப்படுகின்றன.

அந்த வகையில், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட தரப்புக்களுடன் இணைந்து தொடர்ந்தும் இலக்குகளை அடைவதை நோக்கி நகர்கின்ற தலைவரையே நான் பகிரங்கமாக ஆதரிப்பேன் என்றார்.

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழப்புக்களும் சம்பவிக்கின்றன. இதுவரையில் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் ஒழிப்பது ஆகிய வழிமுறைகளே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

முதல் தடவையாக பிரேஸில் நாட்டிலேயே இந்த நோய் பரவாமல் தடுக்க தடுப்பூசி போடப்படுகின்றது. டெங்கில் இருந்து காக்க பிரேசில் நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவது என்று அந்த நாட்டு சுகாதாரத்துறை முடிவு செய்தது.

இதுவரை 5 மில்லியனுக்கும் அதிகமான டெங்கு தடுப்பூசி அந்நாட்டு மக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், உலக அளவில் அதிகமான டெங்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட நாடாக பிரேசில் கருதப்படுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2024இல் வெளியிடப்பெற்றது.